**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2027ம் வருடம் பிப்ரவரி மாதம் 27ம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.No.10/2026**
**in**
**O.S.No.42/2019**

இராஜேந்திரன் (லேட்) வகையறா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

கார்த்தியாயினி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 27.02.2026 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சிகளை விசாரணை செய்வதற்கு ஏதுவாக வாதிகள் தரப்பு சாட்சியத்தை Reopen செய்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

மனுதாரர் இந்த வழக்கில் 3ம் மனுதாரர்/3ம் வாதி. மற்ற மனுதாரர் / வாதிக்காகவும் இந்த மனுவை தாக்கல் செய்வதாகவும், இந்த அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் 2ம் வாதியும், 3ம் வாதியும் முறையே வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 17.02.2026ந் தேதியில் வா.சா.2 எதிர்தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு முடிக்கப்பட்டவுடன் மேலும் சாட்சிகள் இருப்பதாகவும் மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் கோரிக்கை முன் வைக்கப்புடம் மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க வாய்ப்பளிக்கப்படாமல் வா.சா.2 குறுக்கு விசாரணை செய்யப்பட்ட அப்போதே Suo motu வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சியங்கள் சமூகம் நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது என்றஉம் அதாவது வழக்கை நிரூபிக்க வேண்டிய வாதிகளான மனுதாரர்கள்/ வாதிகளுக்கு கூடுதல் சாட்சியம் , சான்றாவணங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படாமல் வாதிகள் தரப்பு விசாரணை பாதியிலேயே முடிக்கப்பட்டு விட்டதாக சமூகம் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டு முடித்து வைக்கப்பட்டது பிரதிவாதிகள் சாட்சியத்துக்காக வாய்தா போடப்பட்டுள்ளது எனவே தனி நபர் சாட்சியங்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் யாரையும் விசாரித்து மனுதாரர்கள்/வாதிகள் தரப்பை நிரூபிக்க மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கப்படாததால் சமூகம் நீதிமன்றத்தில் வழக்கில் சரியான தீர்ப்பு வழங்கப்படும் வாய்ப்பு மனுதாரர்கள்/வாதிகள் மறுக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், எனவே மனுதாரர்கள்/வாதிகளுக்கு பெருத்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படும்

வாய்ப்புள்ளதாகவும் எனவே வாதிகள் தரப்பு சாட்சியத்தை Reopen செய்யக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரையின்,1 சுருக்கம்.</u>**

மனுதாரர் அபிடேவிட்டில் சொல்லியுள்ள விசயங்கள் தவறு என்றும் 1,2 எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்கள் / வாதிகளே கண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டும் என்றும் மனுதாரரின் அபிடேவிட்டில் கண்டுள்ள சங்கதிகளான கூடுதல் சாட்சிகளை விசாரிப்பதற்கு கால அவகாசம் வழங்கவில்லை என சொல்லியுள்ள விசயங்கள் தவறு என்றும் ஏனெனில் இந்த வழக்கானது 10 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வருவதாகவும், இந்த வழக்கில் இது வரையிலும் தனது தரப்பு சாட்சிகள் யார் யார் என்பதையோ, தனது தரப்பு சான்றாவணங்கள் என்ன என்பதையோ வாதிகள் இதுவரையிலும் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் காலம் கடத்தி வந்து தற்போது வாதிகளுக்கு கூடுதல் சாட்சி விசாரணை செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று கூறுவது ஏற்புடையதல்ல, அந்த வகையில் மனுதாரர்கள் / வாதிகள் மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும் மனுதாரர் வழக்கில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வு இந்த வழக்கை விரைந்து நடத்தி முடிக்க உத்தரவிட்டுள்ள போதிலும் இந்த மனுதாரர்கள் /வாதிகள் இந்த வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும் இந்த மனுவில் யாரை விசாரிப்பதற்கான Re open செய்கிறார்கள் என்ற ஆவணம் தாக்கல் செய்ய Re open செய்கிறார்கள் போன்ற விவரங்கள் எதுவும் தெளிவாக குறிப்பிடாத

நிலையில் மேற்படி மனுவானது ஏற்புடையதல்ல என்றும் எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையின், சுருக்கம்.</u>**

மனுதாரரின் அபிடவிட்டு பாரா 2ல், இந்த நம்பர் வழக்கில் எங்களது தரப்பில் 2ம் வாதியும், 3ம் வாதியும் முறையே வா.சா−1 மற்றும் வா.சா−2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், கடந்த 17.02.2026ம் தேதியில் வா.சா−2 எதிர்தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு முடிக்கப்பட்டவுடன் மேலும் சாட்சிகள் இருப்பதாக மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கோரிக்கை முன் வைக்கப்பட்டும் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க வாய்ப்பளிக்கப்படாமல் வா.சா−2 குறுக்கு விசாரணை செய்யப்பட்ட அப்போதே suomoto வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியங்கள் சமூகம் நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது என்றும், அதாவது வழக்கை நிரூபிக்க வேண்டிய வாதிகளான மனுதாரர்கள்/வாதிகளுக்கு கூடுதல் சாட்சியங்கள் சான்றாவணங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படாமல் வாதிகள் தரப்பு விசாரணை பாதியிலேயே முடிக்கப்பட்டு விட்டதாக சமூகம் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டு முடித்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தனி நபர் சாட்சியங்கள் வருவாய்துறை அலுவலர்கள் யாரையும் விசாரித்து மனுதாரர்கள்/வாதிகள் தரப்பை நிரூபிக்க மனுதாரர்கள்/வாதிகள் வாய்ப்பு வழங்கப்படாததால் நீதிமன்றத்தால் வழக்கில் சரியான தீர்ப்பு வழங்கப்படும் வாய்ப்பு மனுதாரர்கள்/வாதிகளுக்கு மறுக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு விசாரணையைப் பாதியிலேயே

நிறுத்தும் நீதிமன்றத்தில் முடிவால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பெருந்த கஷ்ட நஷ்டங்களும் ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படும் வாய்ப்புள்ளது என்று கூறுவதை இந்த எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் கடுமையாக ஆட்சேபிக்கப்படுகிறது என்றும் உண்மையில் மேற்படி எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் பணிவுடன் சமர்பிக்கபடுவது மேற்படி வழக்கில் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நீதிமன்றத்தில் சாட்சிகளின் விபரங்களை பட்டியலிட்டு தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிட்டிருந்தும், மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இருந்து இன்று வரை சாட்சிகளின் விபரங்களை குறிப்பிடாத காரணத்தினாலேயே நீதிமன்றமானது வாதிகளின் தரப்பு சாட்சியத்தை Suo moto ஆக முடித்து வைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி சூழ்நிலையில் மனுதார்கள்/வாதிகளின் வழக்கில் நல்லதொரு வழக்கு மூலம் இல்லாத காரணத்தினாலேயே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், தற்போது தாக்கல் செய்துள்ள மனுவிலும் எந்த சாட்சியை விசாரணை செய்ய இருப்பதாக உள்ளார்கள் என்பது பற்றிய எவ்வித விபரங்களையும் இம்மனுவில் குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றும் இதிலிருந்தே மேற்படி மனுவில் எவ்வித உண்மை தன்மையும் இல்லை என்பது சமூகம் நீதிமன்றத்திற்கு நன்கு விளங்கும் என்றும், மேற்படி வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டபடி செல்லதக்கதல்ல என்றும் எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**தீர்வு**

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை

யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர்கள் தரப்பில் 2ம் வாதியும், 3ம் வாதியும் முறையே வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 17.02.2026ம் தேதியில் வா.சா.2 எதிர்தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு முடிக்கப்பட்டவுடன் மேலும் சாட்சிகள் இருப்பதாகவும் மனுதாரர்கள் தரப்பில் கோரிக்கை முன் வைக்கப்பட்டும் மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க வாய்ப்பளிக்கப்படாமல் வா.சா.2 குறுக்கு விசாரணை செய்யப்பட்ட அப்போதே Suo moto வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது என்பதால் கூடுதல் சாட்சிகளை விசாரணை செய்வதற்காக வாதி தரப்பு சாட்சியத்தை Re open செய்யகோரி வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கினை காலதாமதப்படுத்தவும் இழுத்தடிக்கும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்வாதம் செய்யப்பட்டது.

மனுதாரர் / வாதிகளுக்கு சாட்சிகளின் பட்டியல் மற்றும் சான்றாவணங்களின் பட்டியல் கோரி இந்த மனுவில் கடந்த 24.02.2026ம் தேதி உத்தரவிட்டிருந்தது. உத்தரவின் பேரில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சி பட்டியல்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. வழக்கை 6 மாதகாலத்திற்குள் விரைந்து முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு உள்ள நிலையில் வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியமானது இந்நீதிமன்றத்தால் தானாக முடித்துவைக்கப்பட்டது.

தற்போது வாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளதால் வாதி தரப்பு கூடுதலான சாட்சியத்தை விசாரித்து முடிவு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இம்மனுவை செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 27.02.2026 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.27 15:38:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>: இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>: இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.27 15:38:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.